Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 363

வெள்ளிக்கிழமை 24 நவம்பர் 20

கார்த்திகை 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



தமிழ்க் கட்சிகளுக்கு எதிரான கருத்து

## வீரசேகரவின் மூளையை பரிசோதிக்க வேண்டும்

அநுர பதிலடி

கொழும்பு, நவ. 24
போர் நிறைவடைந்து 14 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நாட்டில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறிருக்கையில், வடக்கு தமிழ் அரசியல் கட்சிகளைத் தடைசெய்யவேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பு உறுப்பினரது மூளையைப் பரி »11

## 11 குளங்கள் வான்பாய்வு!

வவுனியா, நவ. 24
வவுனியாவில் உள்ள 17 குளங்களில் 11 குளங்கள் தொடர்ச்சியான கனமழை காரணமாக வான்பாய ஆரம்பித்துள்ளன.
இதன் காரணமாக குளத்தின் கீழான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைவரும் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-ம-75)

# மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கக்கூடாது!

சரத் வீரசேகர ஆவேசம்

**கொழும்பு, நவம்பர் 24**
**மாவீரர் தினம் அனுஷ்டிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. அவ்வாறு அனுமதிப்பது அனுதாபம் அல்ல, கையாலாகாத்தனமாகும் - என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.** »11

## கருத்துச் சுதந்திரத்தை உடன் உறுதிப்படுத்துக

கொழும்பு, நவ. 24
இலங்கையில் கருத்துச்சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பன பாதுகாக்கப்படவேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியமும், ஐரோப்பிய நாடாளுமன்றமும் இணைந்து வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்குவதாயின் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி இருந்தது. இதனையடுத்து 2020 தொடக்கம் 2022 வரையான காலப் பகுதியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்திருந்தனர்.
ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் அறிக்கையை அடிப்படையாக வைத்தே இந்தக் கூட்டறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## மாவீரர் நினைவு நிகழ்வு சம்பூரில் சிலருக்குத் தடை

மட்டக்களப்பு, நவ. 24
சம்பூர், ஆலங்குளம் துயிலுமில்லத்தில் நினைவேந்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு 17 பேருக்கு மூதூர் நீதிவான் நீதிமன்றால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
சம்பூர் பொலிஸாரால் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கு அமைய இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையுத்தரவுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-27)

## குடும்பப்பெண்ணைக் காணவில்லை கிளி. பொலிஸாரிடம் முறைப்பாடு

கிளிநொச்சி, நவ. 24
கிளிநொச்சி, முரசுமோட்டை இரண்டாம் கட்டை கோரக்கன் கட்டுப்பகுதியில் வசித்துவரும் இளம் குடும்பப் பெண்ணொருவரை கடந்த சில தினங்களாகக் காணவில்லை என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
வேலைக்குச் செல்வதாகத் தெரிவித்துவிட்டுச் சென்ற பெண்ணையே இவ்வாறு காணவில்லை என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-19)

## பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கீடு நிறைவேற்றம்!

கொழும்பு, நவ. 24
2024ஆம் ஆண்டுக்கான பாதீட்டு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்தில், பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு 68 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. ஆரம்பகட்ட சபை நடவடிக்கை »11

## மாவீரர் தூபி பொலிஸால் உடைப்பு

மட்டக்களப்பு, நவ. 24
மட்டக்களப்பு - கிரான்தரவையில் மாவீரர் தின அஞ்சலிப்புக்காக வைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி பொலிஸாரால் »11

## விபத்தில் ஒருவர் இறப்பு!

முல்லைத்தீவு - அணிஞ்சியன்குளத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இன்னொருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பேருந்து - மோட்டார் சைக்கிள் என்பன மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. கந்தையா சிவநாதன் (வயது-48) என்பவரே உயிரிழந்தவராவார். காயமடைந்தவர் மல்லாவி மருத்துவமனையில் முதற்கட்ட சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, மேலதிக் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-ம-75)

கொக்குத்தொடுவாய்

## மனிதப்புதைகுழி இன்று 'ஸ்கான்'

இதுவரை 26 எலும்புக்கூடுகள் மீட்பு!

முல்லைத்தீவு, நவ. 24
முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதிநவீன தொழில்நுட்பக் கருவிகளின் உதவியுடன் இந்தப் புதைகுழி இன்று வெள்ளிக்கிழமை 'ஸ்கான்' செய்யப்படவுள்ளது. புதைகுழியில் இருந்து நேற்றுவரை 26 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-19)

## மாணவி துஷ்பிரயோகம் இளைஞரொருவர் கைது

முல்லைத்தீவு, நவ. 24
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 13 வயதுடைய பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பாடசாலைச் சிறுமியைக் காணவில்லை என்று சிறுமியின் தாயார் கடந்த 18ஆம் திகதியன்று பொலிஸாரிடம் முறையிட்டார். இதற்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தீர்த்தக்கரைப் பகுதியில் சிறுமியை மீட்டுள்ளனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சிறுமியைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். இளைஞர் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலி சங்குடன் முரண்பட்டு சிக்கலை வளர்க்கும் வீரசேகர

## சந்திம வீரக்கொடி சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ.24**

**தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர இலங்கைக்கான தூதுவர் ஜூலி சங்குக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். தேவையற்ற பரிந்துரைகள் இராஜதந்திர மட்டத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்று துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திம வீரக்கொடி சபாநாயகரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்த அமர்வில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றம் எவ்வித கட்டுப்பாடுகளுமில்லாமல், எண்ணம் போல் செயற்படுகிறது. நாடாளுமன்றத்தில் இடம்பெறும் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த மக்களும் நாடாளுமன்ற கட்டமைப்பை வெறுக்கிறார்கள். தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரது செயற்பாடுகளால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 9 (அ) பிரிவில் 'நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை மற்றும் குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் வெளியாள்களுக்கு வழங்குவது தண்டனைக்குரிய குற்றம்' எனத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

துறைசார் மேற்பார்வை குழுவின் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்காமல் கடந்த மாதம் 19 ஆம் திகதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் ஊடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் நாடாளுமன்ற கோட்பாடுகளுக்கு எதிரானது.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர இலங்கைக்கான அமெரிக்க தூதுவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இது முற்றிலும் தவறானதொரு செயற்பாடு. வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஊடாக எச்சரிக்கை விடுக்க முடியுமா?

தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகரவின் தன்னிச்சையான தீர்மானங்களால் எமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இந்தவிடயம் தொடர்பில் நாடாளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழு ஊடாக விசாரணைகளை முன்னெடுக்க வலியுறுத்துகிறேன் - என்றார். (எ-இ)

# முன்னாள் ஜனாதிபதிகள் நாடாளுமன்றம் வரத் தடை

## சட்டம் இயற்ற வேண்டும் என்கிறார் தயாசிறி

கொழும்பு, நவ. 24

ஜனாதிபதிப் பதவியை வகித்தவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் வருவதற்குத் தடை விதிப்பதற்கான சட்டம் இயற்றப்படவேண்டும் . அவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் வருவது தவறான முன்னுதாரணமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன, சந்திரிகா அம்மையார் போன்றோர் ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகிய பின்னர் நாடாளுமன்றம் வரவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, உணவை வீணடிப்பதற்கான தண்டனைச் சட்டமும் கொண்டுவரப்பட வேண்டும். தமக்கு உண்ணக்கூடிய அளவுக்கு அதிகமாகப் பகிர்ந்து உணவை வீணடிப்பது ஏற்புடையதல்ல. வெளிநாடுகளில் இந்தச் சட்டம் நடைமுறையில் உள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# நீண்டகால இலக்குகளுடனே அரசாங்கத்தின் திட்டங்கள்!

## அமைச்சர் அலி சப்ரி கூறுகின்றார்

கொழும்பு, நவ.24

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத் தீர்வுகள் இல்லை என்பதால் நீண்ட கால இலக்குகளைக் கொண்ட வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிச் செல்லவேண்டியது அவசியம் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் பணவீக்கத்தை எம்மால் கட்டுப்படுத்த முடிந்தது. 70 வீதமாக இருந்த பணவீக்கம் 2.5 வீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது, இந்த வருடம் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. இதன் ஊடாக நாம் சரியான பாதையில் பயணிக்கின்றோம் என்பது புரிகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, பொருள்களின் விலைகள் பெரிய அளவில் குறையாவிட்டாலும் அதன் அதிகரிப்பு வேகத்தை நாம் கட்டுப்படுத்தியுள்ளோம். எம்மால் அரசியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளமுடியும். அதன் பலன்களை மக்களே எதிர்கொள்ள நேரிடும்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள புதிய முதலீடுகள் அவசியம். தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும். தொழில் சந்தைக்கு ஆக்கத்திறன் மிக்க இளம் சமூகம் உள்வாங்கப்பட வேண்டும். இந்தமுறை வரவு - செலவுத் திட்டம் இந்தத் திட்டங்கள் உள்ளடங்கலாக எதிர்கால இலக்குகளை கருத்தில்கொண்டு முன்மொழியப்பட்டுள்ளது.

உலகில் மிகக் குறைவாக வரி அறவிடும் நாடுகளில் இலங்கை 8 ஆவது இடத்தில் உள்ளது. ஹைட்டி, சோமாலியா, ஈரான், வெனிசுலா மற்றும் நைஜீரியா போன்ற நாடுகளே அந்த வரிசையில் உள்ளன. அதனால் வரி அறவீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

வரி கட்டாமல் நழுவிச் செல்வோரை வரி செலுத்தும் கட்டமைப்புக்குள் கொண்டுவரவேண்டியது அவசியம் - என்றார். (எ-இ)

# கிரிக்கெட்டைப் பாதுகாக்க அரசியலைக் களையுங்கள்

## ஜனாதிபதி வேண்டுகோள்

கொழும்பு, நவ. 24

இரு தரப்பினருக்கு இடையிலான மோதல் காரணமாக கிரிக்கெட் சரிவைச் சந்தித்துள்ளது. எனவே அரசியல் தலையீடின்றி கிரிக்கெட்டை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரையும் சார்ந்துள்ளது. இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றியபோது ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிரிக்கெட் விவகாரத்தில் நான் சிலரைப் பாதுகாக்க முற்படுவதாகக் கூறப்பட்டது. கிரிக்கெட் விவகாரம் நீண்ட கால பிரச்சினை.

இரு தரப்பினருக்கு இடையிலான மோதல் காரணமாக கிரிக்கெட் சரிவைச் சந்தித்துள்ளது. அதற்கான தீர்வாக புதிய சட்டத்தை உருவாக்கி சட்டத்துக்கமைய சரியான குழுவைத் தெரிவுசெய்யவேண்டும் என்றே நான் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தியுள்ளேன்.

அதற்காகவே சித்ரசிறி அறிக்கையை பின்பற்றி அந்த சட்டத்தை உருவாக்குமாறு கூறினேன். குறித்த வழக்கு தொடர்பில் அமைச்சருக்கு அறிவுறுத்தியிருந்தேன். இவ்வாறான நிலைமைகள் தொடரும் பட்சத்தில் ஐ.சி.சி.யின் தடையை எதிர்கொள்ள நேரிடும்.

அதேவேளை ஐ.சி.சி.யுடனும் கலந்தாலோசித்தேன். அரசியல் தலையீடு கிரிக்கெட்டினுள் உள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சம்மி சில்வாவை பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் குற்றச்சாட்டுகளை களையவே புதிய சட்டத்தை கொண்டுவர வலியுறுத்துகிறேன்.

கிரிக்கெட் சபையை நாம் கலைத்ததாகக் கூறப்படுகிறது. அதற்கு அமைச்சரின் செயற்பாடு சட்டபூர்வமானதா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும் - என்றார். (ச-44)

# மக்களின் பிரச்சினைகளை கவனிக்காத நாடாளுமன்று

## சாடுகின்றார் நீதி அமைச்சர்

மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதைக் காட்டிலும், ஆளும் மற்றும் எதிர்தரப்பினருக்கு இடையிலான மோதல் தொடர்பாக ஆராய்வதற்கே நாடாளுமன்றத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. சபை நடவடிக்கைகளின் போது தொலைபேசி பாவிப்பதை முதலில் தடை செய்யுங்கள் என்று சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளார் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடந்த அமர்வில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிலைக்கு பிரதமர், சபாநாயகர் உட்பட ஒட்டுமொத்த உறுப்பினர்களும் பொறுப்புக் கூறவேண்டும். நிலையியற் கட்டளையை திருத்தி கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த மக்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தை மேன்மை பொருந்தியதாகவும், வெஸ்ட்மினிஸ்டர் முறைமையுடையது என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் இன்று நாடாளுமன்றத்தில் கொள்கைகளுக்கு முரணான செயற்பாடுகள் மாத்திரமே இடம்பெறுகின்றன.

நாடாளுமன்றத்தின் இன்றைய நிலைக்குப் பிரதமர் உட்பட சபாநாயகரும் பொறுப்புக்கூறவேண்டும். நாடாளுமன்ற விவாதத்தை மக்கள் விரும்பிப் பார்த்த காலமும் உண்டு. ஆனால் இன்று நாடாளுமன்றம் தொடர்பான விமர்சனங்கள் மாத்திரமே முன்வைக்கப்படுகின்றன. நாடாளுமன்றத்தைப் பார்வையிட வரும் மாணவர்கள் எதைக் கற்றுக்கொள்கிறார்கள் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலமும் குறைவடையும். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையில் மாற்றம் ஏற்படுத்தியாவது கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல்களுக்காக ரூபா 10 பில்லியன்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 24**

**எதிர்காலத்தில் நடத்தப்படும் தேர்தல்களுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது வரவு- செலவுத் திட்டத்தில் நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும்கூட மதிப்பீட்டு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணையை விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுக்குழு கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பல்வேறு சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 2023ஆம் ஆண்டில் எமது வருமானம், நிர்ணயித்த இலக்குத் தொகையில் 16 வீதம் குறைவடைந்தது. வீழ்ச்சியடைந்த பொருளாதார ஆண்டில், எதிர்பார்த்த இலக்கைப் பூர்த்தி செய்ய முடியாமல் போவது இயல்பானதொரு நிலையாகும். வரவு - செலவுத் திட்ட ஆவணத்தைத் தயாரிக்கும் போது, முதன்மைக் கணக்கை மேலதிகமாக வைத்திருக்கும் இலக்குடன் நகர்வதில் கடுமையான தடைகளைநாம்எதிர்கொள்கிறோம்

இம்முறை முன்வைக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டம் ஒரு தேர்தல் பட்ஜெட் என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் பொருளாதார ரீதியில் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளான மக்களின் பிரச்சினைகளுக்கு விடை காண வேண்டிய நிலையிலேயே இந்த வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே அந்த மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மேலும் எதிர்காலத்தில் நடைபெற உள்ள எந்தவொரு தேர்தலுக்காகவும் 10 பில்லியன் ரூபாவை நாம் ஒதுக்கியுள்ளோம். வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுகளில் இவை நேரடியாக குறிப்பிடப்படா விட்டாலும் கூட மதிப்பீட்டு ஆவணங்களில் அது உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த உலகில் வரி வருமானமோ, அரச வருமானமோ இன்றி முன்னேறிய நாடு இல்லை. அதைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்வதே ஒரு அரசாங்கத்தின் பொறுப்பாகும் -என்றார். (ம-44)



# பதவி வெற்றிடத்தால் இராணுவத்தில் சிக்கல்

கொழும்பு, நவ.24

இராணுவப் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி பதவி வெற்றிடமாக உள்ளது என்று இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவப் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியாகப் பதவி வகித்த மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க ஓய்வு பெற்று ஒன்றரை மாதங்களாகியுள்ள நிலையில் இந்தப் பதவி இன்னமும் வெற்றிடமாக உள்ளது என்று கூறப்படுகின்றது.

இராணுவத்தின் நிர்வாகப்பணிகளில் மிக உயர்ந்த பதவியான இராணுவப் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படாததால், பல நிர்வாகச் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

இராணுவப் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி பதவிக்கு அதிகாரி ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான உரிய நியமனம் ஜனாதிபதியால் வழங்கப்பட வேண்டும் என்றபோதும், இதுவரையில் நியமனம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இந்தியாவுக்கு பாதகமாக இலங்கை செயற்படாது



கொழும்பு, நவ.24

சீனாவுடனான இலங்கையின் உறவு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளில் தங்கியிருக்கவில்லை. இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதத்தில் இலங்கை செயற்படாது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வருடம் இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை இந்தியா உதவி வழங்கியது. கடந்த வருடம் இந்தியா தனது கடனை நீடித்தது.

இந்தியா தனது சொந்தப் பாதுகாப்புக் குறித்துக் கவலையடைந்துள்ளது. இலங்கை, இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படாது - என்றார். (எ-இ)




குடிக்கிறது கூழ், கொப்பளிக்கிறது பன்னீர் எண்ட கதைதான் பலாலி எயார்போர்ட்டில நடக்குற கூத்துகளைப் பாக்கேக்க ஞாபகத்துக்கு வருகுது. மக்கெஸ்டர் எண்ட கொம்பனியைப் பற்றிச் சிலர் கேள்விப்பட்டிருப்பியள், சிலருக்கு அந்தப் பேர் புதிசா இருக்கும். உலகத்தில உள்ள எல்லா நாட்டுப் பேப்பர்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் எல்லாம் இந்தக் கொம்பனியின்ர வெப்சைட்டில போய் காசு கட்டி வாசிக்கலாம். அப்பிடிப்பட்ட மக்கெஸ்டர் கொம்பனி, இலங்கையில ஒரு திட்டத்தைக் கொண்டு வரப்போகுது. இஞ்சையுள்ள ரண்டு எயார்போர்ட்டில 'ஸ்மார்ட் லைப்பிரரி' தொடங்கப் போகினம். அதென்ன 'ஸ்மார்ட் லைப்ரரி' எண்டு கடுமையா யோசிக்காதையுங்கோ. அவையின்ர வெப்சைட்டில இருக்கிற லட்சக்கணக்கான புத்தகங்கள், 8000 பேப்பர்கள் எல்லாத்தையும் இந்த எயார்போட்டில பயணியள் இலவசமா வாசிக்கலாம். உண்மையா நல்லதிட்டம் தான்.

தென்னாசியாவிலையே முதல்முறையா இலங்கையில தொடங்கப்போற இந்த 'ஸ்மார்ட் லைப்ரரிக்கு' ரண்டு எயார்போர்ட்டைத் தெரிவு செய்திருக்கினம். ஒண்டு கட்டுநாயக்க, மற்றது எங்கட பலாலி எயார்போர்ட். ஏற்கனவே பலாலி எயார்போர்ட்டின்ர சீத்துவத்தைப் பற்றி பட்சியில சொல்லிப்போட்டம். ஆனாலும் இப்பவும் அதே குட்டிச்சுவராத்தான் அந்த எயார்போர்ட் இருக்கு. உதைவிட வீடுவழிய இருக்கிற ஆட்டுக்கொட்டில் எவ்வளவோ பரவாயில்லை எண்டு சொல்லுற அளவுக்குத்தான் எயார்போர்ட் இருக்குது. அதுவும் இந்த மாரிமழையோட சேறும், சகதியுமா சிதம்பிப் போயிருக்கிற எயார்போர்ட் காணிக்குள்ள காரும், ஓட்டோவும் போய் வரவே பெரும் பிரகண்டமா இருக்குதாம். அதோட இன்னும் எயார்போர்ட் 'ரண்வே' பழையபடியே இருக்கு. ஒவ்வொருக்காவும் அமைச்சர்மார் வரேக்க 'இப்ப தொடங்குறம், அப்ப தொடங்கிறம்' எண்டு சூக்காட்டுகினமே தவிர, 'ரண்வே'யை பெரிசாக்கிறதுக்கு ஒரு கல்லுக்கூட எடுத்து வைக்கேலை. அதால இந்தியாவில இருந்துவாற பிளேன் மட்டும் தான் வந்துபோகுது. அதுவும் ஒரு குறிப்பிட்ட சனத்தோடதான் ஓடுதாம். இனிவாற தையில இருந்து காங்கேசனில இருந்து 17 ஆயிரம் ரூபாவோட கப்பல்ல போய்வரலாம் எண்டும் செய்தியள் வருகுது. அப்பிடி நடந்தால், இந்தியாவில இருந்து வாற பிளேனும் காத்து வாங்கச் சரி. எயார்போட்டில கடலை விக்கிறவை கூட நிக்காயினம். ஆடு, மாடு மட்டும் மேய விடலாம்.

நிலைமை இப்பிடியிருக்க, முதல்ல எயார்போர்ட்டை திருத்தி, பெரிசாக்கி, வசதியாக்குவம் எண்டில்லாமல், மக்கெஸ்டர் கொம்பனிட்ட போய் 'ஸ்மார்ட் லைப்ரரி' வைக்கச் சொல்லிக் கேட்டிருக்கினம். ஆனால் 'பலாலி எயார்போர்ட்டை திருத்த நாங்கள் காசு தாறம்' எண்டு இந்தியா வலியவந்து சொல்லியும் அதைவாங்கித் திருத்துறதுக்கு இலங்கை அரசாங்கத்துக்கு மனமில்லை. இப்ப எயார்போர்ட் கிடக்கிற கிடைக்கு எங்களுக்கு ஸ்மார்ட் லைப்ரரி ஒண்டு இல்லாததுதான் குறை.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிம்சைப் போராட்டமும் அரசியல்வாதிகளால் சிதைப்பு

## ஐங்கரநேசன் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், நவ. 24**

**அகிம்சை ரீதியான போராட்டங்களில் மிகவும் வலுவான போராட்டமான மனிதச்சங்கிலிப் போராட்டத்தின் அர்த்தத்தை சில அரசியல்வாதிகள் கொச்சைப்படுத்திவிட்டார்கள் எனத் தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்தப்படும் கார்த்திகை வாசம் மலர் கண்காட்சி நேற்றுமுன்தினம் கிட்டுப்பூங்காவில் ஆரம்பமானது. அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் துப்பாக்கி தூக்கிப் போராடக்கூடிய நிலைமையில் இல்லை. ஆனால் அதற்கு ஒத்ததாக அகிம்சை ரீதியாகப் போராட முடியும். அதற்குத் தலைமை தாங்குவதற்கு யாரும் இல்லை. மக்களைச் சரியாக வழிப்படுத்தவும் ஒழுங்கான தலைமை இல்லை. மனிதச் சங்கிலிப் போராட்டம் என மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரை அழைப்பு விட்டார்கள். ஆனால் அதில் கட்சி ஆதரவாளர்கள் கூடப் பங்குபற்றவில்லை. வீதியால் சென்றவர்கள் பங்குபற்றியிருந்தாலே யாழ்ப்பாணம் வரைக்கும் அது நீண்டிருக்கும். ஆனால் வீதியால் சென்றவர்களும் பார்வையாளர்களாகவே சென்றதன் காரணமாக அந்தப் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டு மனிதச் சங்கிலிப் போராட்டம் தோல்வி அடைந்துள்ளது

எமது எதிர்காலச் சந்ததியினர் தற்பொழுது வெவ்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள். தென்னிந்தியச் சினிமா மற்றும் தென்னிந்தியக் கலைஞர்களை இங்கே கொண்டுவந்து கொண்டாடுதல் போன்ற பல்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள்.

அவ்வாறான எதிர்காலச் சந்ததியினருக்கு எமது கடந்த கால வரலாறுகளைக் கடத்துவதற்கு இந்த மரநடுகை மாதமானது ஒரு உதாரணமாகக் காணப்படுகிறது- என்றார். (ஒ-26,27)

# தேர்தல்கள் எப்போது தீர்மானிப்பது அரசா?

## தயாசிறி கேள்வி

கொழும்பு, நவ. 24

தேர்தல்களைத் திட்டமிட்ட அடிப்படையில் ஒத்திவைப்பதன் பின்னணி அரசின் சூழ்ச்சியே என்பது ஜனாதிபதியின் கூற்றின் மூலம் தெட்டத்தெளிவாகியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

தேர்தல்களை நடத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் அறிவித்தார். இன்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றம் வருகைதந்த ஜனாதிபதி அடுத்த வருடம் ஜனாதிபதி, பொதுத்தேர்தல்கள் நடத்தப்படும் எனக் கூறுகின்றார்.

அப்படியானால் ஒத்திவைக்கப்பட்டுள்ள பிரதேசசபை, மாகாணசபைத் தேர்தல்கள் அடுத்தவருடம் நடைபெறாதா? எந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது அரசா? உள்ளாட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை 2025வரை பிற்போடும் நிகழ்ச்சி நிரலும் இந்த அறிவிப்பின் பின்னணியில் உள்ளது - என்றார். (ச-44)

## புலமைப்பரிசில் பரீட்சை

# மேலதிக வகுப்புகளுக்கு ஊவா மாகாணத்தில் தடை

கொழும்பு, நவ. 24

ஊவா மாகாணத்தில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பாடசாலை ஆசிரியர்கள் மேலதிக வகுப்புகளை நடத்துவதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஊவா மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பலர் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தமது கடமை நேரம் தவிர்ந்து மேலதிக வகுப்புகளை எடுக்கின்றனர். இதற்கென மாணவர்களிடமிருந்து அதிக கட்டணம் அறவிடப்படுகிறது எனப் பெற்றோரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அதனையடுத்தே ஊவா ஆளுநரால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-6)

# தொழில்நுட்பக் கல்லூரி கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ. 24

2024ஆம் ஆண்டுக்கான கற்கைகளுக்கு அரச தொழில்நுட்பக் கல்லூரியால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-75)

International Cricket Council

Sri Lanka Cricket

# இலங்கைக்குக் கட்டுப்பாடு ஐ.சி.சி. தளர்த்தியது!

கொழும்பு, நவ. 24

சர்வதேச கிரிக்கெட் பேரவையால் இலங்கைக் கிரிக்கெட் இடைநிறுத்தப்பட்டாலும் இருதரப்பு கிரிக்கெட் மற்றும் ஐ.சி.சி. போட்டிகளில் இலங்கை தொடர்ந்து சர்வதேச அளவில் விளையாடலாம் என்று ஐ.சி.சி. பேரவை அறிவித்துள்ளது.

அஹமதாபாத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவைக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்துக்கு நிதியுதவி கடும் நிபந்தனைகளுடனேயே வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 2024ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்படவிருந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் ஐ.சி.சி. அறிவித்துள்ளது. (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல்கவனம்தேவைப்படும்நாள். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்படலாம். கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம் :** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்;** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டுநீங்கும். இன்று குடும்பம் தொடர்பாக முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கண வன் - மனைவிக்கிடையே அந்நியோன்ய ம் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் [illegible]ும்.

**மகரம்:** கண[illegible]ன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த [illegible]ருத்துவேறுபாடு நீங்கும். உணவு விஷ[illegible]த்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பார்[illegible] நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்பபு உ[illegible]ண்டு

**கும்பம்:** சிறு சிறு கருத்[illegible]றுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தி[illegible] வனம் தேவை. குடும்பத்தினரின் தேவை[illegible] நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்[illegible]து எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் [illegible]கூலமாகும். உறவினர்கள் வகையி[illegible] [illegible]திர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் [illegible]ரோக்கி[illegible] மேம்படும். சிலருக்கு எதிர்[illegible]ாத பண[illegible]வுக்கு வாய்ப்பு உள்ளது.

# மாடுகளைக் கடத்திய கெக்கிராவவாசி கைது

யாழ்ப்பாணம், நவ. 24

சட்டவிரோதமான முறையில் நான்கு பசு மாடுகளை இறைச்சிக்காகக் கடத்திச் சென்ற கெக்கிராவையைச் சேர்ந்த ஒருவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மண்டைதீவு சோதனைச் சாவடியில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த பட்டா ரக வாகனத்தை மறித்து சோதனைக்கு உட்படுத்தியபோது கட்டப்பட்ட நிலையில் 4 பசு மாடுகள் மீட்கப்பட்டன. (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# எதிர்காலச் சந்ததிக்கு என்ன செய்தோம் நாம்?

'இன்னும் 10 ஆண்டுகளில் பிரபாகரன் யார் என்று கேட்கக் கூடிய நிலை ஏற்படும். எங்கள் மக்களிடம் இவ்வாறான மறந்து போகின்ற பண்பு காணப்படுகின்றது" என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மனம்வெதும்பியிருக்கின்றார். தமிழ்த் தேசியத்தோடும், அதன் வீச்சாக எழுந்த ஆயுதப்போராட்டத்தோடும் ஒன்றித்துப் பயணித்த மூத்த தமிழ்த் தலைவர் அவர். அவரது மனம்வெதும்பலில் நியாயம் இருக்கின்றது. எதிர்காலத் தமிழ்ச் சந்ததியின் போக்குத் தெரிந்த எவருக்குமே இந்த அச்சம் இருக்கவே செய்கின்றது. இன்றைய இளம் சமுதாயம் தமிழ்த் தேசியம் அல்லது போராட்டத்திலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது – சென்றுகொண்டிருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்தச் சமுதாயம் களியாட்டவாழ்வியலிலேயே தனது காலத்தைக் கடத்த முனைகின்றது. விடுதலைப் போராட்டம் தொடர்பான ஆகக் குறைந்த புரிதலோ, பற்றோ அறவே இல்லாத சமுதாயமாக எமது கண்முன்னே எதிர்காலச் சந்ததி வளர்ந்துகொண்டிருக்கின்றது. உயிர்கொல்லிப் போதைப்பொருள் கலாசாரம் வாள்வெட்டு என்பன திட்டமிட்டு அந்தச் சந்ததிக்கு ஊட்டப்பட்டு அவர்களின் பாதை திசைமாற்றப்பட்டிருக்கின்றது.

இவை எல்லாம் ஒருபுறம் இருக்க, இளையசந்ததியை வழிப்படுத்தவேண்டிய – நெறிப்படுத்தவேண்டிய கடமையும் பொறுப்பு வாய்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் அதனைச் செய்தார்களா? என்ற கேள்விக்கு எந்தத் தாமதமுமின்றி 'இல்லை' என்ற பதிலையே வழங்கலாம். தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குகின்ற எந்தவொரு கட்சியும் அவர்களை நேர்சீராக்குவதைவிட, அந்த இளைஞர்களைப் பயன்படுத்தி எப்படி மற்றைய கட்சிகள் மீது சேறுபூசலாம் என்பதிலேயே தங்கள் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றன. போதாக்குறைக்கு தேர்தல்களில் தங்கள் தொண்டர்களாக அவர்களை விலைக்கு வாங்கி போதையையும் மதுபானத்தையும் வழங்கி அவர்களை இன்னும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் காரியத்தைத்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்து கொண்டிருக்கின்றன. சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகளாக இங்கு கூசா தூக்குபவர்களும், ஒட்டுக்குழுக்களாக இருந்து அந்தக் கட்சிகளின் எலும்புத் துண்டைக் கவ்வுபவர்களும் கூட இதைத்தான் செய்கின்றார்கள். ஆனால் அது அவர்களுடைய எஜமானர்களின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற அப்படிச் செய்கின்றார்கள் என்று எமக்கு நாமே சமாதானம் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் இனத்தின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும், நல்வாழ்வுக்காகவும் உழைக்கவேண்டிய தமிழ்த் தேசியக் கட்சிகள் அப்படிச் செயற்படமுடியாதே?

இப்போது மனம் வெதும்பும் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், கடும் நெருக்கடிக்குள் மக்களின் அமோக ஆதரவுடன் அமைக்கப்பட்ட வடக்கு மாகாணசபை , இளைய சந்ததிக்கு எம் போராட்ட வரலாற்றைக் கையளிக்க எதுவுமே செய்யவில்லை என்பதை மறந்துவிட்டார் போலும். மக்களுக்கு இருக்கும் மறக்கும் வியாதி அரசியல்வாதிகளுக்கும் இருக்கத்தானே செய்யும். வடக்கு மாகாணசபைக்கு அதிகாரமில்லை என்பது வேறுகதை. ஆனால் மக்கள் வழங்கிய வரலாற்றுக் கடமையையாவது சரிவரச் செய்தார்களா? எதிர்காலச் சந்ததிக்கு எங்களின் வரலாறுகளை அறியக்கூடியதான ஏதாவதொரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தார்களா? இலங்கையின் சட்டத்துக்குட்பட்டு அதன் நெளிவுசுழிவுகளைப் பயன்படுத்தி, தமிழரின் போராட்ட வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்துவதற்கு எத்தனையோ திட்டங்களை மாகாணசபையூடாகக் கொண்டு வந்திருக்கமுடியும் கார்த்திகை மாதத்தை மரநடுகை மாதமாக அறிவித்து மரநடுகையை ஊக்குவித்ததைப் போன்று திட்டங்களை நடைமுறைப்படுத்தி, அதன் ஊடாக, தமிழர் போராட்டத்தை அடுத்த தலைமுறையின் மனதில் பதியவைக்க மாகாணசபை எதுவும் செய்யவில்லையே.

இனப்படுகொலை தொடர்பில் மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். ஆனால், இனப்படுகொலைக்குரிய அடையாளங்களை எமது மண்ணில் நிறுவினார்களா? தமிழகத்தில் தஞ்சையில் முள்ளிவாய்க்கால் முற்றம் அமைக்கப்பட்டு இனப்படுகொலை வரலாறு காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகக்குறைந்தது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு ஓர் இடத்தை அடையாளப்படுத்தி, அங்கு நினைவேந்தல்களைச் செய்தவர்கள் அங்கு நினைவேந்தல் முற்றத்தை அமைக்க முயலவில்லை. மாறாக பிரதான சுடரை யார் ஏற்றுவது? நிகழ்வை யார் ஒழுங்கமைப்பது? என்பதில் ஆளுக்காள், கட்சிக்குக் கட்சி என்று முரண்பட்டு எல்லாவற்றையும் சிதைத்தார்கள்.

எதிர்காலச் சந்ததிக்குச் சரியான வரலாறு கையளிக்கப்பட வேண்டும். அதைச் செய்யாமல் விட்டுவிட்டு எல்லாப் பழியையும் இளையோர் மீது சுமத்துவது தவறு. காலங்கடந்த பின்னர் மனம்வெதும்பாமல், இனி இருக்கும் காலத்திலாவது இளைய சமுதாயத்திடம் 'நாமும் நமக்கோர் அரசும், ஆள்புலமும், படையும், வரலாற்றில் எப்போதும் கிடைக்காத தலைவனையும் கொண்டிருந்தோம்' என்ற வரலாற்றைக் கையளிக்கவும், அவர்களைச் சரியான பாதையில் நெறிப்படுத்தவும் உருப்படியானபணிகளைஅனைவரும்முன்னெடுக்கவேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்கவேண்டும்."

- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி)





# வடக்குக்கு அரசியல் தீர்வு; அபிவிருத்திக்கும் நடவடிக்கை!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, நவ.24**

**வடக்குக்கு அரசியல் தீர்வு வழங்கி, வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசமைப்புப் பேரவையின் ஒருசில உறுப்பினர்களின் செயற்பாடுகளினால் நெருக்கடி நிலை தோற்றம் பெற்றுள்ளது. பேரவையின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய விசேட தெரிவுக்குழு உருவாக்கப்படும்.

அரசமைப்புப் பேரவை நிறைவேற்றுத்துறையின் பகுதி இல்லை என்று சுமந்திரன் குறிப்பிடுவதை ஏற்கமுடியாது. நிறைவேற்றுத்துறையின் ஓர் அங்கமாகவே பேரவை உருவாக்கப்பட்டது. ஆகவே, அரசமைப்புப் பேரவைநிறைவேற்றுத்துறையின் அங்கமாகவே செயற்பட வேண்டும்.

அரசமைப்புப் பேரவையின் உறுப்பினராக சித்தார்த்தனை நியமிக்கும் பரிந்துரை தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு ஒருமித்த தீர்மானத்தை எடுத்தால் என்னால் ஒரு கட்டளையைப் பிறப்பிக்கமுடியும். அரசமைப்புப் பேரவையில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு முன்னுரிமை வழங்கமுடியாது - என்றார். (எ-இ)

# கொலை வழக்கு; எதிரி விடுவிப்பு

கிளிநொச்சி, நவ. 24

மருதங்கேணியில் 2015ஆம் ஆண்டு நபர் ஒருவருக்கு கடும் காயம் விளைவித்து உயிரிழப்பை ஏற்படுத்தியதாக குற்றம்சுமத்தப்பட்ட எதிரி கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் குற்றச்சாட்டுகளிலிருந்து நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நேற்றுமுன்தினம் தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி சஹாப்தீன் முன்னிலையில் வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் முதலாம் சாட்சியான உயிரிழந்தவரின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய சாட்சி மற்றும் நீதிமன்றுக்கு வழங்கிய சாட்சி ஆகியன முரண்பாடாக காணப்பட்டமை, எதிரிக்கு வழக்குத் தொடுநர் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு வழக்குத் தொடுநரால் நிரூபிக்கப்படவில்லை என்பதன் அடிப்படையில் எதிரியை விடுவித்து மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-113)

**நாளை** 25.11.2023

சனிக்கிழமை
கார்த்திகை 9

சுபநேரம் : 03.12 - 04.42
ராகுகாலம் : 09.12 - 10.42

சனிப் பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அச்சுறுத்தவுள்ள புதிய வகைக் காய்ச்சல்!

பீஜிங், நவ. 24

சீனாவில் கடந்த சில நாள்களாக அறியப்படாத ஒரு புதிய வகை நிமோனியாக் காய்ச்சல் பரவி வருகின்றது என்று சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பீஜிங், லியோனிங் மற்றும் பல நகரங்களில் உள்ள குழந்தைகள் இந்த நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவுக்கு வெளியிலும் இந்தக் காய்ச்சல் வியாபிக்கும் சாத்தியம் உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-ம)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி 85 ரூபாய்
0773341281


## நன்நடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணம் பெறுகைகளுக்கான அழைப்பு

## உலர் உணவு பொருட்கள் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்களுக்கான பெறுகை 2024 முதலாம் அரையாண்டு

தலைவர் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைகள பெறுகைக் குழுவினால் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள பின்வரும் அலுவலகங்ளுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்களை 2024ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டிற்கு வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| S.N | Details | Sale House Kilinochchi | State Receiving Home Kaithady | Certified School Atchuvely |
|---|---|---|---|---|
| | Reference No. | NP/30/02/04/Diet & Con/SH-Kill/2024 | NP/30/02/04/Diet & Con/SRH-Kai/20024 | NP/30/02/04/Diet & Con/CS-Achu/ 2024 |
| | Non Refundable Fee | Rs 3500/- | Rs 3500/- | Rs 3500/- |
| S.N | Type of Food | Amount of Bid Security (Rs) | | |
| 1 | Fresh Vegetables and | 20,000 | 10,000 | 20,000 |
| 2 | Meat Eggs and Sea Foods | 14,000 | 8,000 | 14,000 |
| 3 | Dry Foods Packets, Tins | 20,000 | 10,000 | 20,000 |
| 4 | Bakery Products | 1,000 | ............ | 1,000 |
| 5 | Consumable Items | 20,000 | 10,000 | 20,000 |
| | If quoted all category | **75.000** | **38.000** | **75.000** |

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்தம் அளிப்பு செய்வதற்த வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   * கேள்விவிதாரர் குறித்த பெறுகைக்கு பொருத்தமான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்
   * அத்துடன் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினை கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்தம் அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதார்கள் மேலதிக தகல்வகளை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலத்தில் பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 24.11.2023 ஆம் திகதி தொடக்கம் 14.12.2023 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் மேற் குறிப்பிடப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 15.12.2023 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பதாக ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். முன் ஆயத்த பெறுகைக் கூட்டம் 11.12.2023 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நடைபெறும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**இ.குருபரன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி :- **021 205 7102** தொலைநகல் : - **021 205 7103**

(Cr.41040) (N.1)

# சமயதீட்சை வழங்கலும் சர்வாலய தீப பூஜையும்

வட்டுக்கோட்டை, நவ. 24

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம், கண்ணகியம்மன் ஆலயங்களில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு சமய தீட்சை வழங்கலும் பி.ப. 3 மணிக்கு சர்வாலயதீபஉற்சவமும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (எ-இ)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் ஐஓசி பெற்றோல் செற்றிற்கு முன்பாக A09 வீதியில் இருந்து 200M தூரத்தில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 224 7902


## வன்னி, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ/து)

A-09 வீதி, கிளிநொச்சி
தொலைபேசி இலக்கம் - 0212283696, 0217200456

### மூடிய கூறுவிலை கோருதல்

அலுவலக பயன்பாட்டிலிருந்த XTREME மோட்டார் சைக்கிள் 2015 இல் உற்பத்தி செய்யப்பட்டது. (NP BECXXXX) ஒன்று விற்பனைக்காக பகிரங்கமாக 24.11.2023ந் திகதி மூடிய கூறுவிலை கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் 07.12.2023ந் திகதிக்கு முன்னர் மேற்படி முகவரிக்கு தலைவரிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் 21.12.2023ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டு பூர்த்தி செய்து மீளப்பெற்றுக்கொள்ள முடியாத பணம் ரூபா ஐந்நூறினை (500.00) செலுத்தி நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலக நேரத்தில் (8.30AM - 4.00PM) வரை மோட்டார் சைக்கிளைப் பார்வையிட முடியும்.

**தலைவர்.**

(CS 25676) S-1

## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகரும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆகிய சங்க உறுப்பினரும், பதிவு பெற்ற நில அளவையாளரும்

### அமிர்தநாதர் சந்தியாபிள்ளை



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம்,
(வட பகுதி)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை-மானிப்பாய் ஆதன வரி செலுத்துதல் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் அசைவற்ற ஆதனங்களைக் கொண்டிருப்பவர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் குறித்த ஆதனங்களுக்குரிய இவ்வாண்டுக்கான ஆதனவரி மற்றும் நிலுவைத் தொகையினை பிரதேச சபையின் தங்கள் பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் 10.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். சபையின் ஆதனவரி செயற்பாடுகளை கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் 11.12.2023 ஆம் திகதி முதல் 31.12.2023 ஆம் திகதி வரை ஆதன வரி அறவீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
24.11.2023

(CR 41088) A-1

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். பொது அறிவித்தல் ஆதனவரி அறவீடுகள்

எமது சபைக்குட்பட்ட ஆதனங்கள், ஆதன வரி அறவீட்டு முறைமை என்பன முழுமையாகக் கணினி மயப்படுத்தப்படவுள்ளதால் ஆதனவரி அறவீடானது 2023.12.01 ஆந் திகதி தொடக்கம் 2023.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு மீளவும் 2024.01.01 ஆந் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். நடப்பாண்டு, அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய ஆதனவரி செலுத்துவோர் 2023.11.30 ஆந் திகதிக்கு முன்னர் தங்கள் ஆதனங்களுக்குரிய ஆதன வரியினை செலுத்தி கணினி மயப்படுத்துவதற்கு தங்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**இராமலிங்கம் பகீரதன்**
செயலாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
24.11.2023

(CR 41087) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகை அறிவித்தல்
## மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்.
## தனியார் பாதுகாப்புச் சேவை - 2024

1. மாந்தை கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றன.

2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம் தொலைபேசி:- 0212283475 தொலைநகல்: 0212283476** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 24.11.2023 முதல் காலை 09.00 மணியிலிருந்து மாலை 02.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்** எனும் இடத்திலிருந்து 24.11.2023ம் திகதியிலிருந்து 07.12.2023 வரை வேலை நாட்களில் **காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும்** இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2,000.00** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

4. கேள்வி ஆவணங்கள் **தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக் குழு, மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்** எனும் முகவரிக்கு 07.12.2023 ம் திகதி மாலை 02.00மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

5. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | தேவையான ஆளணி எண்ணிக்கை | | கேள்வி பிணை வைப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இரவு | பகல் | கேள்வி செல்லுபடியாகும் நாட்கள் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை தொகை | கேள்வி பிணை செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(2)/03/Sec. Ser/2024 | பாதுகாப்பு சேவை | 1 வருடம் | 1 | 1 | 49 நாட்கள் | 25.01.2024 | 10,000.00 | 23.02.2024 |

6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைக் குழு,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை,**
**பாண்டியன்குளம்.**
**24.11.2023**

(cr.38096) (2.6)


## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1943



மறைவு 22 . 11 . 2023

### தில்லையம்பலம் யோகரத்தினம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

நாச்சிமார் கோவிலடி கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் யோகரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (22.11.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனகாந்தாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், அன்னரத்தினம், சிவகுருநாதன் மற்றும் குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் அவர்களின் அன்பு மைத்துனரும், மயூரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் கல்வி அமைச்சு வடமாகாணம்), சுஜீவன், நிஷாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - தெல்லிப்பளை), நிரோஷா, சயந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவகலா (அபிவிருத்தி உத்தியோகத்தர் நன்னடத்தை திணைக்களம்), முகுந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - உடுவில்), பிருந்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிஷாந்த், வர்ஷித், யஸ்வித், மோஷித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாச்சிமார் கோவிலடி,**
**கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை.** (cs 52938) (N.I)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் பொன்னம்பலநாதன் (துரை)



**(முன்னாள் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர், முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், முன்னாள் கிளி.திருவையாறு மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், முன்னாள் படித்த விவசாய கூட்டுறவுச்சங்க தலைவர், சி.க.உ. கூட்டுறவுச்சங்க பொருளாளர்)**

**பிறப்பு 17.12.1952** **இறப்பு 22.11.2023**

மண்டைதீவை பிறப்பிடமாகவும் 50/1, திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் பொன்னம்பலநாதன் (துரை) அவர்கள் 22.11.2023 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் கனகமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பாக்கியரஞ்சினியின் பாசமிகு கணவரும் தினேஸ்குமார்(மாவீரர்), நதீஸ்குமார் (அறிவிப்பாளர்), றஜீஸ்குமார் (பிரான்ஸ்), ஜனீஸ்குமார் (தனியார் வங்கி உத்தியோகத்தர்), பிருந்தா, கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்தானலட்சுமி, காலஞ்சென்ற சரவணபவானந்தன் (வேல்முருகா) மற்றும் வசந்தமலர், சிறீதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும் காயத்திரி, செந்தினி, ஜென்சா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசன்யா, கிரிஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2023 இன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**50/1,திருவையாறு,**
**கிளிநொச்சி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**பொ.நதீஸ் - 0094777406282**
**பொ.றஜீஸ் - 0033751160315**
**பொ.ஜனீஸ் - 0094771792862**

(CS 27065) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,நெளுக்குளம் ஆட்டிறைச்சிக்கடை, ஓமந்தை கடை 01,02 நடாத்துவதற்கான

# மீள் கேள்வி அறிவித்தல் 2024

01. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த **நெளுக்குளம் ஆட்டிறைச்சிக்கடை, ஓமந்தை கடை** 01,02 போன்றவற்றை 2024 ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான மீள் கேள்விகள் 2023.11.24 தொடக்கம் 2023.12.08 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப்பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2023.12.08 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்படிவங்களில் ஒரு பிரதி **செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். **கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும்.** குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

03. 2023.12.08ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

04. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாகவும் வவுனியா மாவட்டத்தினை சேர்ந்தவராகவும் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும். கறுப்பு நிரலில் உள்ளவருக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.

05. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.

06. குத்தகைக்காலம் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியினை கொண்டதாக இருக்கும்.

07. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து சபையினால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் தங்களால் கோரப்படும் கேள்வித்தொகையில் 1/3 பகுதியையோ அன்றி முழுவதையுமோ காரியாலயத்தில் செலுத்தி கடைக்கான உடன்படிக்கையை பூர்த்தி செய்தல் வேண்டும்.

08. கேள்வித்தொகையின் மிகுதி 2/3 பகுதியினை 8 சம தவணைக்கட்டணங்களாக செலுத்துதல் வேண்டும். மாதாந்த கட்டுப்பணங்களை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக குத்தகைப்பணம் முழுவதும் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் VAT, NBT என்பனவும் செலுத்தப்படல் வேண்டும். இக்கால அவகாசத்திற்குள் குத்தகைப்பணத்தை செலுத்தத் தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் பறிமுதல் செய்வதுடன், கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து கேள்வியினை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு கேள்வி வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களது பெயர் கேள்விகோரும் தகுதியுடையவர்களின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் கறுப்புப் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.

09. ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான வாடகைப் பணத்தினை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. கேள்விகோரும் போது சித்தி பெறும் குத்தகைப்பணத்தினை குறித்த கால எல்லைக்குள் கட்டுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்

11. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாக வும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது. கேள்விப்படிவங்களைப் பெற முன்பும் அதற்குப் பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமானது.

12. இறைச்சி, மீன்கடைகளில் வழங்கப்படும் இறைச்சிகள், மீன்கள் சுத்தமாகவும், நோயற்ற இறைச்சியாகவும் நிறை சரியாகவும், சபையினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விலை விகிதாசாரப்படியே பொது மக்களுக்கு விற்பனை செய்தல் வேண்டும். நடமாடும் மற்றும் கோழி வியாபாரிகள் அக் கடையிலிருந்து சுற்றுவட்டாரம் 500மீற்றர் தூரத்திற்குள் மீன் மற்றும் கோழி வியாபாரத்தில் ஈடுபடமுடியாது.

13. சுகாதாரப்பரிசோதகரால் அனுமதிக்கப்பட்ட இறைச்சியை, மீனை மட்டுமே கடையில் வைத்து விற்பனை செய்தல் வேண்டும். இவை தவிர வேறு இறைச்சியையோ அல்லது உணவுக்கு ஒவ்வாத இறைச்சியையோ, மீனையோ விற்பனை செய்தால் அவ் இறைச்சியை, மீனை பறிமுதல் செய்வதுடன் ஒப்பந்தமும் இரத்து செய்யப்படும்.

14. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் சித்திபெற்ற மாதாந்த கட்டுப்பணத்தினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலுமின்றி குத்தகை இரத்துச்செய்யப்பட்டு ஒப்பந்த பிணைப்பணத்தினை சபையின் நிதியத்திற்கு மாற்றும் அதிகாரம் சபைக்கு அல்லது செயலாளருக்கு உண்டு.

15. இங்கு அறிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்திற்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்து மூலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

16. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ, அல்லது கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கும் எனக்கும் உரிமையுண்டு.

17. மீன் விற்பனையைப் பொறுத்த மட்டில் மீன்களும் தரமானதாகவும் நல்லதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தல் வேண்டும்.

18. உரிய நேரத்தில் கேள்விப்படிவங்களை சமர்ப்பிக்காத கேள்விதாரின் கேள்விப்பிணைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

19. குத்தகைக்கு எடுத்தவர் உபகுத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.

20. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

| தொ.இல | கடை விபரம் | 2024 கேள்வி கோர வேண்டிய தொகை | மாத வாடகை | கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்வி படிவ கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | நெளுக்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 361000.00 | 2000.00 | 25000.00 | 2000.00 |
| 02 | ஓமந்தை கடை 01 | | 694.23 | 25000.00 | 2000.00 |
| 03 | ஓமந்தை கடை 02 | | 694.23 | 25000.00 | 2000.00 |

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**2023-11.24**

(cm41081)(N.1)

## புதிய மீன்சந்தை புத்தூரில் திறப்பு

வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட புத்தூர் பிரதேசத்தில் புதிய மீன் சந்தை மக்களின் பாவனைக்காக நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. பிரதேச செயலாளர் ஆர்.பகீரதன் இந்தக் கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந் துவைத்தார். உள்ளூராட்சி அபிவிருத்தி உதவித் திட்ட நிதிப்பங்களிப்பில் இந்தக் கட்டடம் அமைத்துக்கொடுக்கப்பட்டது. (ச-75)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




**2023 ஆம் ஆண்டு நடைபெற்ற**
**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்**
**வ/விபுலானந்தா கல்லூரியில்**
## 156 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்த **திரு.திருமதி நகுலேஸ்வரன் ராஜஸ்ரீ** தம்பதியரின் புதல்வி
**செல்வி**
## நகுலேஸ்வரன் லித்திக்ஷா
அவர்கள் கல்வியில் மேலும் சிறப்புற
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: மாமா, அத்தை, மைத்துனர் குடும்பம்.**
**திருமதி வி. இராஜேந்திரம்**
(ஓய்வுநிலை ஆசிரியை பூவரசங்குளம் ம/வி)

(cs 52771)(N.1)

## மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் மக்கள் பார்வைக்குவைத்தல்

1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளை சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரைவு வரவு செலவுத் திட்டம் பொது மக்கள் பார்வைக்காக 24.11.2023 - 08.12.2023 வரை பிரதேச சபையிலும் பிரதேச சபை பொது நூலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

**திரு.செ.செல்வகுமார்**
**செயலாளர்,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
10 . 10 . 1943



**மறைவு**
23 . 11 . 2023

## அரியகுட்டி சின்னத்துரை

யாழ். தாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட அரியகுட்டி சின்னத்துரை அவர்கள் நேற்று (23.11.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா பரமேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சிவாநந்தினி, சிவரூபன் (முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி), பிரசிந், பிரியங்கன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜறின் சோபியாவின் (கொமர்ஷல் வங்கி) பாசமிகு மாமனாரும், ஷெறில், ஷெபிக்கா, ஷெவின் ஆகியோரின் அன்புப் பேரனும், விஜயன், செல்லத்துரை, தவமணி, காலஞ்சென்ற தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாவடி வீதி,**
**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 872 7625, 077 250 0617**

(CS 52939) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூரில் நாடக விழா

யாழ்ப்பாணம், நவ. 24
செம்முகம் ஆற்றுகைக் குழுவின் நாடக விழா யாழ். புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் குமாரசாமி மண்டப அரங்கில் இரு நாள்கள் இடம்பெறவுள்ளது.
இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் மாலை 5 மணி முதல் விழா இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-66)

### வீர, வீராங்கனைகள் உருவாக்கம்

# கிராமங்கள் தோறும் விளையாட்டுக் குழு!

யாழ்ப்பாணம், நவ. 24

**கிராமட்டத்திலுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு உந்துசக்தியாக கிராம மட்ட, பிரதேச மட்டத்தில் விளையாட்டுக் குழுக்களை உருவாக்குமாறு பிரதேச சமுர்த்தி அலகுகளுக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.**

கிராமமட்டத்திலுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் ஆற்றலை வளர்க்கும் விதமாக, அதற்கமைய ஒவ்வொரு கிராம மட்டத்திலும் சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த குறைந்தது பத்துப் பேர் கொண்ட விளையாட்டுக் குழுவை உருவாக்கி பிரதேச மட்டத்தில் பயிற்சிகளை வழங்கவேண்டும்.

பயிற்சிபெறுவோர் பாடசாலை மட்டப் போட்டிகள் மற்றும் அனைத்து வகைப் போட்டிகளிலும் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்று தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் ஆற்றலை மேம்படுத்தவேண்டும். இதற்கு விளையாட்டுக் குழுக்களுக்கு கிராம மட்டத்திலுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகளைப் பயன்படுத்தி பயிற்சிகளை அளிக்கலாம்.

ஒவ்வொரு கிராமத்திலும் சிறந்த வீர, வீராங்கனைகளை உருவாக்க இந்தச் செயற்றிட்டம் வழிவகுக்கும் என்றும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-9)

## பட்ஜெட்டில் துமிந்த 'பல்டி'

கொழும்பு, நவ. 24
வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளார் சுதந்திரக் கட்சி உறுப்பினரான துமிந்த திஸாநாயக்க.
சுதந்திரக் கட்சியில் சில உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். எனினும், துமிந்த திஸாநாயக்க பதவி எதையும் பெறவில்லை.
சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன வாக்கெடுப்பின்போது எதிராக வாக்களித்தார். அக்கட்சியின் முன்னாள் செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் எதிராவே வாக்களித்திருந்தார். எனினும், துமிந்த திஸாநாயக்க ஆதரவாக வாக்களித்துள்ளார். அத்துடன், வாக்கெடுப்பில் பங்கேற்கமாட்டார் என எதிர்பார்க்கப்பட்ட அமைச்சர் ரொஷான் ரணசிங்க, பங்கேற்று, ஆதரவாக வாக்களித்தார். (ம-44)



தேசிய மட்டத்தில் நடைபெற்ற சங்கீதப் போட்டியில் நாட்டார் பாடல் பிரிவில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது. (ச-75)

## 'அஸ்வெசும' கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 24
தென்மராட்சிப் பிரதேசத்தில் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்பட்ட பயனாளிகளுக்கான ஓகஸ்ட் மாதத்துக்குரிய இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் விநியோகிக்கப்படுகின்றன.
இந்தக் கொடுப்பனவுகளை வழங்கும் பணிகள் அந்தந்த வங்கிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-9)

## வெள்ளப்பேரிடர் தணிப்புக்காக முறிகண்டி மக்கள் சிரமதானம்



முல்லைத்தீவு, நவ. 24
பிரதான வாய்க்கால்களில் காணப்படும் பற்றைகளால் உக்கும், உக்காத பொருள்கள் அடைபட்டு வெள்ள நீர் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்து வரும் நிலையில், இந்த வெள்ள இடர் பாதிப்புகளைத் தடுப்பதற்காக பொதுமக்கள் ஒன்றிணைந்து துப்புரவுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-27-125-113)

## 'அஸ்வெசும' பயநருக்கு நலன்புரிச் சேவைகள்!

யாழ்ப்பாணம், நவ. 24
'அஸ்வெசும' திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கு சமுர்த்திப் பயநர்களுக்கு வழங்கப்படும் நலன்புரிச் சேவைகளைப் பெற்றுக்கொடுக்க சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சமூகப் பாதுகாப்பு, வீடமைப்பு, 'சிப்தொர' கல்வி மற்றும் கட்டாய சேமிப்பு உள்ளிட்ட திட்டங்கள் 'அஸ்வெசும' பயநர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. அதற்கமைய பயனாளிகளின் சம்மதத்துடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அனைத்துப் பிரதேச சமுர்த்தி அலுவலகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-9)



கிளிநொச்சி மாவட்டத்தில் மாவீரர் நாள் ஆரம்ப நிகழ்வாக மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வட்டக்கச்சியில் இடம்பெற்றது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்கள் பங்கேற்றனர். (ச-113)

## மாற்றுத்திறனாளர் தினம் தென்மராட்சியில் நாளை

கொடிகாமம், நவ. 24
தென்மராட்சி கல்வி வலய மாற்றுத்திறன் மாணவர்களுக்கான தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலையில் அதிபர் அமரா சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண தொழில்துறை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சத்தியா தனுராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

## 2024 ஓய்வூதியத் திகதிகள்

சாவகச்சேரி, நவ. 24
2024ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
ஜனவரி 10, பெப்ரவரி 9, மார்ச் 7, ஏப்ரல் 8, மே 10, ஜூன் 10, ஜூலை 10, ஓகஸ்ட் 9, செப்ரெம்பர் 10, ஒக்ரோபர் 10, நவம்பர் 8, டிசெம்பர் 10 ஆகிய திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படுமென ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் ஏ. ஜகத்.டி.டலஸ் அறிவித்துள்ளார். (ஒ-9)

## மன்னார் கடல்வளங்களைப் பாதுகாக்க இணைக!

மன்னார், நவ: 24
மன்னார் கடற்பிராந்தியத்தில் எமது மூதாதையர்கள் எம்மிடம் விட்டுச் சென்ற அரிய வளங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடமே தங்கியுள்ளது.
மன்னாருக்கென கிடைக்கப்பெற்ற இந்த வரப்பிரசாதங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று மன்னார் 'மெசிடோ' நிறுவனத்தின் பணிப்பாளர் யே.யாட்சன் பிகிராடோ தெரிவித்துள்ளார்.
சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசியப் பொருளாதாரத்தில் வடக்கு மாகாணத்தின் கடல் வளம் பெரும் பங்காற்றுகிறது. மீனவர்களின் பலமே இந்த நாட்டின் முதுகெலும்பாகும். பொருளாதாரப் பிரச்சினை, வளச்சுரண்டல், இந்திய மீனவரின் அத்துமீறல் உள்ளிட்ட பல விடயங்களைத் தாண்டியே மீனவர்கள் உழைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.
சர்வதேசக் கடலில் இல்லாத வளங்கள் எமது மன்னார் கடற்பிராந்தியத்திலேயே காணப்படுகின்றன.
இது மன்னாருக்குக் கிடைக்கப்பெற்ற மாபெரும் வரப்பிரசாதமாகும். இதனைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எம்மிடமுள்ளது - என்றார். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு

கிளிநொச்சி, நவ. 24

மாவீரர் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி சுண்டிக்குளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மங்கல வாத்திய இசையுடன் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டு மாவீரர் பெற்றோர் உரித்துடையோர் மதிப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்கு தென் னம்பிள்ளைகளும், நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (ஒ - 113)





## மரண அறிவித்தல்



**பரமகுரு சுந்தரமூர்த்தி**

**(ப.நோ.கூ சங்க முகாமையாளர், அச்சுவேலி ப.நோ.கூ சங்கம்)**

யாழ் ஆவரங்கால் 10ம் கட்டடையைப் பிறப்பிடமாகவும். சிவன் வீதி. ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட பரமகுரு சுந்தரமூர்த்தி அவர்கள் நேற்று (23.11.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமகுரு நாகம்மா தம்பதியரின் மூத்தமகனும். காலஞ்சென்ற சண்முகம் சரஸ்வதியின் அன்பு மருமகனும். லோகேஸ்வரி (பேபி) அவர்களின் அன்புக்கணவரும். சிந்து (லண்டன்). நிலானி (ஆசிரியை- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்ற தணிகைக்குமரன் (தனுஸ்) மற்றும். பரநிருபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும். நிதுன். நிகிஷா. அத்விகா. தன்விஜா ஆகியோரின் பாசமிகு பேரனும். காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் வனிதாமணி. தவமணி. பரமேஸ்வரி. நாகரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2023) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
நிருபன் 0773836371

(GR 41100) S-1

## குருபூசைத் தினம்

**கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்**
(MA,PHD)



**கார்த்திகை ரேவதி**

உதவுவார் மனைவி மக்கள்
உறவினர் நண்பரென்று
மதி தடு மாறி நின்றேன்
மண்பொருள் பொன்னும் தேடி
நதியுறு மரமேயானேன்
நல்விடு தலையை யெய்த
மதிவளர் சடையினானே
வந்தெனக் கருளுவாயே

அருட்கவி.சீ.விநாசித்தம்பிப் புலவர்

அன்னாரது குருபூசைத் தினமானது இன்று சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் எட்டாம் நாள் வெள்ளிக்கிழமை (24.11.2023) அவரது சமாதியில் மு.ப 11.00 மணியளவில் பூசைகளுடன் ஆரம்பமாகும். இந்நிகழ்வில் அன்பர்கள் அனைவரையும் வருகை தந்து. அதனைத் தொடர்ந்து அன்னசுரபி மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

மகள்
திருமதி தி.ஸ்ரீரங்கநாயகி.

(S 27066) S-1



# நாட்டின் சட்டம் சீரின்மையால் பறிபோனது இளைஞனின் உயிர்!

## ஜனநாயக லெனினிசக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 24

வட்டுக்கோட்டை பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞனின் பெறுமதிமிக்க உயிர் பொலிஸாரின் மோசமான சித்திர வதையால் பறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடூரச் செயல் நாட்டின் சட்டம், ஒழுங்கு சீரில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

-இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் குறிப்பிட்டுள்ளதாவது:-

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 25 வயதான அப்பாவி இளைஞனின் உயிர் சித்திரவதையால் பறிக்கப்பட்டுள்ளது.

சித்தன்கேணி இளைஞனின் விடயத்தில் உரிய விசாரணை நடத்தப்படும் எனக் கூறி அதனை நீர்த்துப்போகச் செய்து மடைமாற்றுவதற்கு இடமளிக்கமுடியாது. உயிரிழந்த இளைஞனுக்கு நீதி வேண்டியும் மீளவும் இத்தகைய பொலிஸ் பிடி படுகொலைகள் நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு எமது கட்சி ஆதரவளிக்கும்- என்றார். (ச)



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**நாகலிங்கம்**
**சரஸ்வதி**
**திதி: 24.11.2023**

ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டது
ஆறவில்லை எங்கள் துயரம் அம்மா
கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப்போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அத்தியடி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24.03.1954

மறைவு 04.12.2022

**அமரர் கந்தையா குணராசசிங்கம்**

திதி: துவாதசி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய. கைதடி வீரகத்திப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாவீரர்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சரத் வீரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

'மாவீரர்தினம் தொடர்பில் பேசப்படுகின்றது. அல்குவைதா அமைப்பின் தலைவர் ஒசாமாவை அமெரிக்காவில் நினைவுகூர முடியுமா? உயிரிழந்த பயங்கரவாதிகளை நினைவுகூர இடமளிப்பது அனுதாபம் அல்ல, கையாலாகாத்தனமாகும். பயங்கரவாதிகளை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. புலிகள் கர்ப்பிணிப் பெண்களைக் கொன்றனர். பச்சிளம் குழந்தைகளைக் கொன்றனர். பிக்குகளைக் கொன்றனர். இவ்வாறு கொடூரச் செயல்களில் ஈடுபட்டவர்கள்தான் விளக்கேற்றி அஞ்சலிக்கப்படுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் தான் இதனைத் தூக்கிப் பிடித்துள்ளன.

கூட்டமைப்பு என்பது புலிகளின் அரசியல் கிளை. பிரபாகரனே கூட்டமைப்பை உருவாக்கினார். புலிகளை முடித்த கையோடு அந்தக்கட்சியை தடை செய்யாமல் மஹிந்த தவறிழைத்துவிட்டார். மஹிந்த காட்டிய கருணைதான் இன்று பூகம்பமாகியுள்ளது' - என்றார். (அ-ம-44)

### வீரசேகரவின்...

சோதனை செய்யவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைத்து தேசிய நல்லிணக்கம் உறுதி செய்யப்பட்டால்தான் தேசியப் பாதுகாப்பை உறுதிசெய்ய முடியும். இனவாத கருத்துகளின் வெளிப்பாடுகளால்தான் 30 வருட காலப் போர் தோற்றுவிக்கப்பட்டது. ஆட்சியாளர்கள் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு கட்டவிழ்த்து விட்ட இனவாதங்களால்தான் இந்த நாடு 30 வருட காலப் போரை எதிர்கொண்டது. போர் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இனங்களுக்குகிடையில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளைத் தடை செய்யவேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பின் உறுப்பினரது மூளையைப் பரிசோதனை செய்யவேண்டும்.

இவர்கள் ஒருபோதும் தேசிய நல்லிணக்கத்தை எதிர்பார்க்கவில்லை. இனவாதத்தை பரப்பி அதன் ஊடாக தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே தொடர்ந்து முயற்சிக்கிறார்கள் - என்றார். (அ-ம-44)

### பாதுகாப்பு...

கள் முடிவடைந்த பின்னர், பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் ஆரம்பமானது.

குழு நிலை விவாதத்தின் பின்னர் மாலை 6 மணியளவில் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறித்த வரவு - செலவுத் தலைப்புக்கு வாக்கெடுப்பைக் கோரினார். இதற்கமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் குறித்த செலவுத் தலைப்புக்கான ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 76 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (அ-ம-44)

### மாவீரர் தூபி...

உடைத்தெறியப்பட்டுள்ளது. சட்டத்துக்குப் புறம்பாகத் தூபி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வாழைச்சேனைப் பொலிஸார் நீதிமன்றத்தின் கட்டளையைப் பெற்று அந்தத் தூபியை அப்புறப்படுத்தியுள்ளனர். (அ-ம)

---

கைதியைப் பிடிப்பதற்காக

# ஆற்றில் குதித்துச் சென்ற பொலிஸ் அலுவலர் மாயம்

**சாவகச்சேரியைச் சேர்ந்தவர்**

யாழ்ப்பாணம், நவ. 24

ஆற்றில் பாய்ந்து தப்பிச்செல்ல முற்பட்ட கைதியை பிடிப்பதற்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளார்.

ஜா - எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் யாழ். சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி பிரகாசன் (வயது-26) என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார் என்று ஜா - எல பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையான நபரொருவர் ஜா - எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு பொலிஸார் அழைத்துச்சென்றுள்ளனர்.

அவ்வேளையில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஜா - எல ஆற்றில் சந்தேகநபர் பாய்ந்து தப்பிப்பதற்கு முற்பட்டுள்ளார். அவரைப் பிடிப்பதற்கு பொலிஸாரும் ஆற்றில் இறங்கியுள்ளனர். இதன் போதே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளார்.

பிரதேச வாசிகள், கடற்படை சுழியோடிகள் இணைந்து அவரைத் தேடும் நடவடிக்கையில் இறங்கினர். மாலை வரை தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. கடும் மழையால் ஜா - எல ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்ததால் தேடும் பணி நிறுத்தப்பட்டது. தப்பிச்செல்ல முற்பட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-44)

## போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 24

நூற்றுக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழாலை தெற்கு - மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-125)

## கசூரினா கடற்கரையில் இன்று மரநடுகை

யாழ்ப்பாணம், நவ. 24

காரைநகர் பிரதேசசபையின் ஏற்பாட்டில் மாவட்ட வன அலுவலகத்தின் அனுசரணையில் காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலா மையத்தில் மரநடுகை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் கி.விஜயேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாணம் வட்டார வன அதிகாரி டி.எம்.பி.ஆர்.கருணநாயக்கா பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (ச-66)

## மாவீரர் நினைவேந்தலுக்கு கட்டப்பட்ட கொடிகள் அறுப்பு

கொடிகாமம், நவ. 24

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் இராணுவ முகாம் முன்பாக அமைந்துள்ள மாவீரர் நினைவேந்தல் இடத்தில் கட்டப்பட்டிருந்த மாவீரர் நினைவேந்தல் கொடிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இனந்தெரியாதோரால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இதுகுறித்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன் முறைப்பாடுசெய்துள்ளார். அவ்விடத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் கட்டப்பட்ட நினைவுக் கொடிகள் அறுத்தெறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-27)

## பிச்சை கேட்கவில்லை உரிமையே கேட்கிறோம்

**சுமந்திரன் சபையில் ஆக்ரோஷம்**

கொழும்பு, நவ. 24

நாம் யாசகர்கள் அல்லர். யாசகம் கேட்கவும் இல்லை. உரிமைகளைத்தான் கோருகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உரிமைப் பிரச்சினை காரணமாகவே 30 வருடகாலப் போரை எதிர்கொள்ள நேரிட்டது. ஆனால் நீங்கள் இன்னமும் அதனையே செய்கின்றீர்கள். நாம் இந்நாட்டு யாசகர்கள் அல்லர். நாம் யாசகம் கேட்கவும் இல்லை. இந்த வாரம் மிக முக்கியமான வாரம். வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் தமது இறந்த உறவுகளை நினைவுகூரும் வாரம். பிரிக்கப்படாத ஒன்றிணைந்த நாட்டில் வாழவேண்டும் என நாம் விரும்புகின்றோம். நீங்கள் இப்படிச் செய்தால் அது எப்படிச் சாத்தியமாகும்?

பொதுமக்களின் நம்பிக்கையை மீறுவது மிக மோசமான விடயம். பொதுமக்களின் நம்பிக்கையை மீறியவர்களின் பெயர்களை உயர் நீதிமன்றம் வெளியிட்டுள்ளது. அவ்வாறு உயர்நீதிமன்றத்தால் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு இந்தச் சபையில் அமர்வதற்கு எந்த உரிமையும் இல்லை. உண்மையான ஜனநாயக நாடுகளில் தீர்ப்பு வெளியாகி, மறுநாளே பதவி விலகல் இடம்பெற்றிருக்கும். எனவே, இப்போதாவது சட்டத்தை மதித்து, மஹிந்த ராஜபக்ச பதவி விலகவேண்டும்- என்றார். (ஒ-44)

## சங்கக் கடையில் கூரை பிரித்து திருட்டு!

பருத்தித்துறை, நவ. 24

வதிரி அரசடிப் பகுதியில் உள்ள ப.நோ.கூ. சங்கக் கிளை கூரை பிரித்துத் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குரிய வதிரி அரசடிப் பகுதியில் உள்ள கிளையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நள்ளிரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் கடையை மூடிவிட்டுச் சென்ற கிளை முகாமையாளர் நேற்று வியாழக்கிழமை காலை கிளையைத் திறக்கச் சென்றபோது கூரைப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த 'லெவல் சீற்' கழற்றப்பட்டு பொருள்கள் திருடப்பட்டமை தெரியவந்தது. (ஓ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைப்பொருளியல் டிப்ளோமாவுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்ப்பாண கிராம அபிவிருத்தித் திணைக்களத் தால் நடத்தப்படும் மனைப்பொருளியல் டிப்ளோமா தரச் சான்றிதழ் கற்கைநெறிக்குப் பயிலுநர் களைத் தெரிவு செய்வதற்கானவிண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறியைத் தொடர விரும்பும் யாழ்.பிரதேச செயலகத்துக் குட்பட்ட 18 தொடக்கம் 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு என்று யாழ்ப்பாணப் பிரதேச செயலா ளர் எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (ரி)

# திடீரெனத் தீப்பற்றிய வாகனம்; உரிமையாளருக்குக் காயம்

பருத்தித்துறை, நவ. 24

கரவெட்டியில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ள நிலையில் அதனை அணைக்க முற்பட்ட உரிமையாளர் தீக்காயங்க ளுக்குள்ளானார்.

வாகனத்தில் பற்றிய தீயை அணைக்க முற்பட்ட வீட்டின் உரிமையாளர் தர்மபாலன் சுதாகரன் (வயது-45) என்பவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கிவிட்டுத் திரும்பிய நிலையில் வாகனம் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது முற்பகல் திடீரெனத் தீப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-100)

# கஞ்சா கடத்தல்: இருவருக்குத் தண்டம்

கிளிநொச்சி, நவ. 24

கிளிநொச்சி கட்டைக்காட்டுப்பகுதியில் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்ப ளித்துள்ளது.

கிளிநொச்சி கட்டைக்காட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்த முற்பட்ட இருவர் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

குறித்த சந்தேகநபர்களுக்கெதிராக பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டநிலையில் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமும் மற்றையவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி எ.எம்.எம். சஹாப்தீன் தீர்ப்பளித் தார். (ச-113)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
- திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
- நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389
077 986 5457

(CS 26920) A-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 11 . 1939



மறைவு 23 . 11 . 2023

### சின்னத்துரை கந்தசாமி

சுழிபுரம் மூளாயைப் பிறப்பிடமாகவும் இல.94, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி அவர்கள் நேற்று (23.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், மீனாட்சிதேவியின் பாசமிகு கணவரும், விக்னேஸ்வரன், ஈஸ்வரன், விமல்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜனனி, யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், டிஷால், கௌஷல், பிருந்தேஸ், டிதுஸ், கருனீஸ், அதிஷ்டா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஸ்கந்தபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

விக்னேஸ்வரன் (கண்ணன்)-077 371 5763
ஈஸ்வரன் (பாபு-பிரான்ஸ்)-0651868882

(CS 27067) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 21.10.1949

மறைவு 22.11.2023

### கந்தையா சத்தியநாதன்

(ஓய்வு நிலை புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்)

பழைய வீதி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் V.C. அடி கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சத்தியநாதன் நேற்றுமுன்தினம் (22.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், வசந்தாதேவி, கமலாதேவி (திருகோணமலை), யோகநாதன், றஞ்சநாதன் (பிரான்ஸ்) ஜெயநாதன் (பிரான்ஸ்), ஜெயகலாதேவி (பவானி - பிரான்ஸ்) வதனி (மாலினி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்வராசா (லண்டன்), விமலா, துரைராசா (பிரான்ஸ்), திலகவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.C. அடி, பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
074 307 4922



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org